
புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்துடன் இணைந்து

# தென்னிந்திய பெண் எழுத்தாளர்கள் சந்திப்பை நிகழ்த்திய சாகித்ய அகாதெமி

■ புதுச்சேரி

சாகித்ய அகாதெமி மற்றும் புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம் இணைந்து தென்னிந்திய பெண் எழுத்தாளர்கள் சந்திப்பை நடத்தியது. பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை கருத்தரங்கக் கூடத்தில் நடைபெற்ற தொடக்க விழாவில் சாகித்ய அகாதெமியின் செயலாளர் சீனிவாசராவ் வரவேற்புரையாற்றினார்.



● சாகித்ய அகாதெமி மற்றும் புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம் இணைந்து நடத்திய தென்னிந்திய பெண் எழுத்தாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டோர்.

பொதுக்குழு உறுப்பினர் பூபதி பெரியசாமி அறிமுக உரையாற்றினார்.

தென்னிந்திய சாகித்ய அகாதெமி ஒருங்கிணைப்பாளர் மிருணாளினி தலைமையுரையாற்றினார். பால் சாகித்ய புரஸ்கார் (தமிழ்) விருதாளர் மீனாட்சி சிறப்புரையாற்றினார்.

இதில், சாகித்ய அகாதமியின் பொதுக்குழு உறுப்பினர் பூபதி பெரியசாமி எழுதிய சிறார் சிறுகதை நூல் 'காட்டுத் தாத்தா' என்ற தலைப்பில் தமிழிலும் ''பாதர் ஆப் தி வுட்' என்ற தலைப்பில் ஆங்கிலத்திலும், 'கிராந் பேர் டுயூ புவா' தலைப்பில் பிரெஞ்சிலும் வெளியிடப்பட்டது. பல்கலைக்கழகத் துணைவேந்தர் பிரகாஷ் பாபு, இயக்குநர் தரணிக்கரசு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். புலமுதன்மையர் சுடலைமுத்து நன்றி கூறினார்.

இரண்டு அமர்வுகளாக நடைபெற்ற நிகழ்வின் முதல் அமர்வில், சிறுகதை வாசிப்பு மற்றும் கலந்துரையாடல் நடைபெற்றது. இதில், கன்னட மொழி எழுத்தாளர் சார்பில் சுஜாதா, மலையாள மொழி சார்பில் சபிதா, தமிழ் மொழி சார்பில் பால் சாகித்ய புரஸ்கார் விருது பெற்ற மீனாட்சி, தெலுங்கு மொழி சார்பில் பூர்ணிமா தம்மிரெட்டி ஆகியோர் சிறுகதைகள் வாசித்தனர். இரண்டாம் அமர்வு கவிதை வாசிப்பு மற்றும் கலந்துரையாடலாக நடைபெற்றது. இதில் மலையாள எழுத்தாளர் கனிமோள் தலைமை தாங்கினார். லட்சுமி கன்னட மொழியிலும், கவிஞர் இளம்பிறை தமிழ் மொழியிலும், ஜலஜா தெலுங்கு மொழியிலும் கவிதைகள் வாசித்தனர்.

நிறைவுவிழாவுக்கு இயக்குநர் கிளமெண்ட் லூர்து தலைமை தாங்கினார். துறைத் தலைவர் கருணாநிதி, நாவலாசிரியை அமிர்தவள்ளி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். ஆலோசனை குழு உறுப்பினர் முருகையன் நன்றி கூறினார்.